# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 103/2015 நாள்.20.9.25

DW2- திருமதி.நித்யா , த /பெ. திரு. கல்யாணசுந்தரம்

2ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும் பாகத்திற்காக தாக்கல் செய்துள்ளார்கள். எந்த சொத்திற்கு பாகம் கோரியுள்ளார்கள் என்றால் பூர்விக சொத்திற்கு. அது எந்த ஊரில் உள்ளது அதன் சர்வே நம்பர் தெரியுமா என்றால் கத்தரி நத்தம் கிராமத்தில் புல எண் 311/1ஏ, 311/1பி, 311/2, 311/4 ஆகும். மேற்படி சொத்துக்கள் அல்லாமல் எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்து உள்ளது என்றால் வீடும் எதிர்புறம் ஒரு மனையும் உள்ளது. அது இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லைஎ ன்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்யும்போது வாதிகள் எனக்கு எதிராக விரோதமாக இருந்தார்கள் என்றால் இல்லை. நான் தவறான விபரம் சொல்லுகிறேன் என்றும் என் தகப்பனார் என் மீது விரோதமாக இருந்தார் என்பதால்தான் என்னை பிரதிவாதியாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதியிடம் வாதிகள் மற்றும் நான் எல்லோரும் சேர்ந்து தாவா சொத்தை அவரே செலவு செய்து அவரை பிரிக்கசொன்னோம் என்றால் ஆமாம். அந்த செலவை செய்து 2ஆம் பிரதிவாதிதான் மனையை பிரித்தார் என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி மனைபிரிவுக்கு செலவு செய்ததொகையை மனையை விற்கும்போது எங்களுக்கு வரும் பாகத்திலிருந்து கொடுப்பதாக சொன்னோம் என்றால் ஆமாம். 7 மனைகளை விற்பனை செய்தோம் என்றால் ஆமாம். 7மனை விற்கும்போது எல்லோரும் சேர்ந்து பூர்விக சொத்து என்று சொல்லி விற்றோம் என்றால் ஆமாம். 7மனை விற்கபட்டபோது அதிலிருந்து வந்த கிரய த்தொகையில் வாதிகள் யாரும் மற்றும்நானும் 2ஆம் பிரதிவாதிகு மனைபிரிவு செய்ய ஏற்பட்ட செலவுதொகையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல பணத்தை அவர்தான் வைத்துகொண்டார் அப்பாவுக்கு மட்டும் 2லட்சம் தந்தார். நான் வழக்கிற்காக என் அப்பாவுக்கு ஆதரவாக அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. பாகபிரிவினை சம்மந்தமாக எங்கள் குடும்பத்தில் பஞ்சாயத்து நடந்தது என்றால் 2015 வருடம் ஜனவரி மாதம் நடந்தது. அந்த பஞ்சாயத்தில் என்ன

முடிவானது என்றால் எல்லோருக்கும் செட்டில் பண்ண சொன்னார்கள். பஞ்சாயத்து விபரத்தை எழுதி கொண்டார்களா என்றால் தெரியாது. நான் சொன்னது போல் பஞ்சாயத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த வருடம் திருமணமானது என்றால் 2.3.2015. எனக்கு திருமணம் நடந்தபிறகு எனக்கும் என் அப்பாவுக்கு பேச்சுவார்த்தை இல்லை என்றால் ஆமாம், திருமணத்தை 2ஆம் பிரதிவாதி செலவு செய்து நடத்திவைத்தார் என்றால் ஆமாம். நான் என் அப்பாவுடன் தற்சமயம் ராசி ஆகிவிட்டதால் எதிர்வழக்குரையில் சொன்ன சங்கதிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாபநாசம் நீதிமன்றத்தில் அ.வ எண் 85/2016 என்ற வழக்கை நானும் சகோதருடன் சேர்ந்து தாக்கல் செய்துவிட்டு தற்போது அந்த வழக்கை மறுக்கிறேன் என்றால் சரியல்ல அதில் நான் கையெழுத்து போடவில்லை. என் சகோதரர் அசோக் என்ன காரணத்திற்காக 5ஆம் வாதியை பிரதிவாதியாக மாற்ற கோரினார்ஏ ன்றால் தெரியாது. என் தகப்பனார் கேட்டுகொண்டதற்கிணங்க 4ஆம் பிரதிவாதிக்கு எதிராக தவறான தகவல் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் மணிமொழி ஐஸ்வர்யம் நகர் போட்டது குடும்ப சொத்து வருமானத்திலிருந்து போட்டதாக சொல்லுகிறேனா என்றால் தவறு. 2ஆம் பிரதிவாதிகடு தனிபட்ட முறையில் வருமானம் உள்ளது என்றும் அதை வைத்து அவர் ஐஸ்வர்யம் நகர் போட்டார் என்றால் சரியல்ல. ஐஸ்வர்யம் நகர் குடும்ப பாகத்திற்குட்பட்டதல்ல என்றால் சரியல்ல. ஐஸ்வர்யம் நகர் சொத்தை வழக்கில் சேர்க்க மனுபோட்டு தள்ளுபடியானது என்றால் தெரியாது. ஐஸ்வர்யம் நகர் போடுவதற்கு நாங்கள் 11லட்சம் பணம் கொடுத்தாக சொல்வது என் கணவரை பாட்னராக சேர்த்துகொள்வதாக சொன்னதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதிக்கு லேஅவுட் போடும் அளவுக்கு தனிபட்ட வருமானம் இருந்ததால்தான் அவரை போடசொன்னோம் என்றால் சரியல்ல. அவருக்கு மாதம் ரூ.5000 வருமானம் என்று முதல்விசாரணை வாக்குமூலத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதி என் அப்பா, அம்மாவை 2015 ஆம் ஆண்டு தாக்கியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதி தாவா சொத்தை மனைபிரிவுக்காக செய்த செலவை திரும்ப கொடுக்காமல் இருப்பதற்காக இந்த வழக்கை என் அப்பா தாக்கல் செய்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

மேற்கண்ட குறுக்குவிசாரணை சுவீகரிக்கபட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u> இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.